## அழகு சாதனப் பொருட்கள் வாங்கும் போது நாம் எவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்?



- ‘இயற்கையானவை’, ‘இரசாயனக் கலவை இல்லாதவை’, ‘எண்ணெய் இல்லாதவை’ ‘100%...’ போன்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் பொய்யானவை
- கவர்ச்சியான விளம்பரங்களை / உத்திரவாதங்களை பார்த்து ஏமார்ந்து விடக் கூடாது
- வண்ணச்சாயங்களும், இரசாயனக்கலவையே,
- தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் தேதியை கவனிக்க வேண்டும்.

## சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய பொருட்களை பயன்படுத்துவதை எவ்வாறு தவிர்க்க வேண்டும்?



- விழிப்புடைய சுற்றுச்சூழல் நண்பராக இருக்க வேண்டும்.
- முடிந்தவரை பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும்.
- கடைக்கு செல்லும் பொழுது உங்களிடம் இருக்கும் துணி/சணல் பைகளை எடுத்து செல்ல வேண்டும்.



- பிளாஸ்டிக் பொம்மைகளை வாங்கித் தருவதை தவிர்த்தல்.
- மக்கும் தன்மையுடைய கழிவுகளான காய்கறி, பழத்தோல்கள், உணவு போன்றவற்றை பிரித்தெடுத்து உரமாக்கி, மக்காத தன்மையுடைய கழிவுகளான பிளாஸ்டிக், கண்ணாடி போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.
- உங்கள் வீட்டுக் கழிவுகளை குப்பை தொட்டியில் போடுங்கள்

**ஆடம்பர நுகர்வைத் தவிர்ப்போம் !**

**தரமான பொருட்களையும்**

**தரமான சேவைகளையும்**

**முறையாக பயன்படுத்துவோம் !!**





**நுகர்வோர் நலனை பாதுகாக்க**

**ஒன்றாக கைக்கோர்த்து குரல்**

**கொடுப்போம் !!!**

### ஆடைகள்...



- துணியின் நிறம் சாதாரண சலவைக்குட்பட்டதா?
- கட்டாயமாக ரசீது வாங்க வேண்டும். வாங்கிய ரசீதை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- விலை உயர்ந்த பட்டு ஆடைகள் வாங்கும் போது ‘சில்க் மார்க்’ தர முத்திரை இருப்பதனை சரி பார்ப்பது அவசியம்.

### தங்கம்...

- தங்கத்தின் தரத்தை, நிர்ணயிக்கும் 'Hall Mark' முத்திரை. விற்பவரின் முத்திரை.
- கல் பதித்த நகைகள் வாங்கும் போது, கற்களின் எடை குறித்த விவரங்கள் அடங்கிய ரசீது.
- நகை வாங்கியதற்கான ரசீது மற்றும் தரச் சான்றிதழ்.

## போலியான விளம்பரங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் எவ்வாறு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்?



- ஒரு பொருளை வாங்கும் போதும் அல்லது மாற்றிக் கொள்ளும் போதும் அறிவிக்கப்படும் பரிசு விளம்பரங்கள் குறித்து கவனமுடன் தெரிந்துக் கொள்ள வேண்டும்.
- பரிசு பொருட்களுக்காக, இலவச இணைப்புக்காக, தரமற்ற அல்லது தேவையற்ற பொருட்களை வாங்குதல் கூடாது.
- கவர்ச்சி விளம்பரங்களைக் கண்டு ஏமாறக் கூடாது.

**டிசம்பர் 24** — **தேசிய நுகர்வோர் தினம்**

**மார்ச் 15** — **உலக நுகர்வோர் உரிமை தினம்**

## உணவு பொருட்கள் வாங்கும் போது லேபிள்களில் கவனிக்க வேண்டியவை யாவை?

- பொருளின் விலை
- கலவைகள் அல்லது கூட்டுப் பொருட்களின் விபரம்
- தயாரித்த தேதி, “இந்த தேதிக்கு முன் பயன்படுத்த வேண்டும்” போன்ற விவரங்கள்



- எடை, காலாவதியாகும் தேதி
- தயாரிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி
- தரத்தை உத்திரவாதப்படுத்தும் முத்திரைகளான எப்.பி.ஓ (FPO) அக்மார்க் (AGMARK)
- எப்படி பயன்படுத்த வேண்டும் மற்றும் எப்படி பாதுகாக்க வேண்டும் போன்ற தகவல்கள்

## சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்ல விளைச்சலை பெற என்ன செய்ய வேண்டும்?



- தரமான விதைகளை தேர்ந்தெடுக்கவும்.
- அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் களிடமிருந்து விதைகளை வாங்கவும்.
- போலி அல்லது வீரியம் இல்லாத விதைகளை எவரேனும் உங்களுக்கு விற்றால், உடன் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அல்லது மாவட்ட ஆட்சியருக்கு புகார் கொடுக்கவும்.
- அளவுக்கு அதிகமான பூச்சிகொல்லி உபயோகத்தைத் தவிர்க்க வேண்டும்.
- இயற்கை விவசாய முறையை பயன்படுத்தலாம்.
- ஈரப்பதத்தையும், கரையும் உயிர்சத்துக்களையும் தக்க வைத்துக் கொள்ள உதவும் இயற்கை உரத்தை பயன்படுத்தலாம்.

## மருந்துகளை வாங்கும் முன் கவனிக்க வேண்டியவை யாவை?



- உற்பத்தி செய்யப்பட்ட தேதி, காலாவதியாகும் தேதி.
- மருந்தின் பெயரும், மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்தையும் சரி பார்த்தல்.
- அதிகபட்சம் விற்கும் (MRP) விலை.
- வாங்கிய மருந்துகளுக்கு முறையான பில்.
- எப்படி சாப்பிட வேண்டும் எத்தனை முறை சாப்பிட வேண்டும், எப்படி பாதுகாக்க வேண்டும் போன்ற தகவல்கள்.



**மருத்துவரின் மருந்து சீட்டின் படி**
**குறிப்பிட்ட நேரங்களில் மருந்து உட்கொள்க**
**மருத்துவர் அறிவுரையின்றி தாமாகவே மருந்தினை**
**உட்கொள்வது உடல் நலத்திற்குக் கேடு**

இன்றைய இளம் நுகர்வோரை சிறந்த, தெளிந்த நுகர்வோராக மாற்ற மத்திய அரசின் வழிகாட்டுதலின் பேரில், தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சில:

- பள்ளிகளில் / கல்லூரிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல்.
- பெண்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்கு நுகர்வோர் கல்வி பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபடுதல்.
- கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- நுகர்வோரின் நலனுக்காக 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்', என்கிற மாத இதழை வெளியிடுதல்.
- வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு கருத்துக்கள் வெளியிடுதல்

தமிழக அரசிற்கு உறுதுணையாக பல தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மக்களை சிறந்த நுகர்வோராக்க தங்கள் ஆதரவினை அளித்து இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

TAMCOS : 2848 5000

**தொகுப்பு**


சிட்டிசன் கன்சியூமர் அண்ட் சிவிக் ஆக்ஷன் குரூப்
எண் 9/5, இரண்டாவது தெரு, பத்மநாபா நகர், அடையார், சென்னை 600 020.
தொலைபேசி : +91-44-2446 0387 / 4218 7686
தொலைநகல் : +91-44-2491 4358
மின்னஞ்சல் : contact@cag.org.in
இணையதளம் : www.cag.org.in